# இந்தியாவின் போக்கால் இலங்கை சீற்றம்

(லண்டன்)

இன்று கொழும்பில் ஆரம்பமாகவிருந்த 'சார்க்' நாடுகளின் மகாநாடு நிறுத்தப்பட்டதற்கு இந்தியாவே காரணமெனவும் இது குறித்து இலங்கை கடும் சீற்றமடைந்துள்ளதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 21 இதழ்: 267
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 07-11-1991

07-11-1991

## வடபகுதி முற்றாக ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

வட பகுதியில் தற்போது ஊரடங்குச் சட்டம் எந்தப் பகுதியிலும் அமுலில் இல்லை என பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது. இதுவரை கிளிநொச்சி

(4-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் புதிய இயக்கம்

(கொழும்பு)

தென்பகுதியில் புதிய இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி பிரேமதாசாவை பதவியிலிருந்து இறக்கும் நோக்கிலேயே இப்புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக அச்

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ திட்டமிட்டபடி ஆறுவது சார்க் மாநாடு நடைபெறாது

# இலங்கை அரசு ஆழ்ந்த கவலை

(கொழும்பு)

ஆறுவது 'சார்க்' உச்சி மாநாடு திட்டமிட்டபடி நடைபெறாதது குறித்து இலங்கை அரசு ஆழ்ந்த கவலையடைந்துள்ளது. மேலும் இம் மாநாடு இவ்வருடம் நடைபெறுவதற்கான சாத்தியமில்லை எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இது குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுவதாவது: ஏழு சார்க் நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், பாகிஸ்தான், நேபாளம், இந்தியா, மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள், இம்மாதம் 7ம்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியா திருப்தி

(புதுடில்லி)

சார்க் மாநாடு நிறுத்தப்பட்டது குறித்து இந்தியா தரப்பில் திருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது. எனினும் இது குறித்து இலங்கையின் சீற்றத்தை அலட்சியப்படுத்தியுமுள்ளதாம். (இ)

## மாநாடு ஒத்திவைப்பிற்கு இந்தியா மீது குற்றச்சாட்டு

(புதுடில்லி)

6-வது சார்க் மாநாடு திட்டமிட்டபடி இன்று கொழும்பில் நடைபெறாததற்கு இந்தியாவே காரணமென பரவலான குற்றச்சாட்டொன்று எழுந்துள்ளது.

இலங்கையை அவமானப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இந்தியா இம்மாநாட்டில் பூட்டான் மன்னரை கலந்து கொள்ளவேண்டாமென கூறியதாகவும் இக்குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டு குறித்து இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் வன்மையாக மறுத்ததுடன் இதற்கும்

(4ம் பக்கம் பார்க்க)

## புயல், வெள்ளம் 2,000 பேர் பலி!

(மணிலா)

மத்திய பிலிப்பைன்ஸில் புயலினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட கடும் அனர்த்தத்தில் இதுவரை 2,000 பேர் வரை

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய பிரதமரின் விஜயம் ரத்தானது

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவின் இலங்கைக்கான ராஜாங்க விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது!

சார்க் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டதையடுத்தே திரு. நரசிம்மராவின் இவ்விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.

இதேவேளை 'சார்க்'கில் அங்கம் வகிக்கும் 6 நாட்டு தலைவர்கள் இன்று கொழும்பு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வங்காள பிரதமர் வருகை

(கொழும்பு)

பங்களாதேஷ் பிரதமர் திருமதி பேகம் காலிதா ஷியா நேற்று இரவு 7-00 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து சேர்ந்தபோது இலங்கைப் பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா அவரை வரவேற்றார். (வி)

## கையூம் புதிய திகதி பற்றி அறிவிப்பார்

(மாலே)

மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம், சார்க் அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி பின்னரே மேற்படி உச்சி மாநாட்டை நடத்துவதற்கான புதிய திகதியை அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் அமைப்பின் தற்போதைய தலைவரான மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம் இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவுக்கு அனுப்பி வைத்துள்ள தகவல் ஒன்றில்

(4-ம் பக்கம் பார்க்க)

## பூட்டான் பங்குபற்றாததற்கு இலங்கையே காரணமாம்

(மணிலா)

கொழும்பில் நடைபெறவிருந்த 6வது சார்க் உச்சி மாநாட்டுக்கான அழைப்பை இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் ஒவ்வொரு நாட்டுக்கும் தாமாகக் கொண்டு சென்று வழங்கியதாகவும், இவர் பூட்டானுக்கு மட்டும் நேரடியாக வரவில்லை என்பதாலேயே பூட்டான் மன்னர் வெறுப்படைந்து இந்த மாநாட்டை புறக்கணிக்க முடிவு செய்திருக்கலாமென்று சில அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (மா)

## சார்க் தலைவர்களுக்கு இன்று வரவேற்பு?

(கொழும்பு)

கொழும்பில் 'சார்க்' மாநாட்டில் கலந்துகொள்ளும் தலைவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி திட்டமிட்டபடி இன்று நடைபெறுமென அரச தகவல்கள் நேற்றுத் தெரிவித்தன. (4-ம் பக்கம் பார்க்க)

## வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு ரத்து

(கொழும்பு)

கொழும்பில் நேற்று நடைபெறவிருந்த 'சார்க்' அமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடும் நேற்று நடைபெறவில்லை. 'சார்க்' உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டதை அடுத்தே இந்த மாநாடும் நடைபெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியா செல்ல வேண்டாம்

## ஐரோப்பிய நாடுகள் எச்சரிக்கை

(ஜெனிவா) ஐரோப்பிய நாட்டவர்களை இந்தியா செல்லவேண்டாம் என அந்தந்த நாடுகள் எச்சரித்துள்ளன.

இந்தியாவின் பல மாநிலங்களில் தொடர்ந்தும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதை அடுத்தே, அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளின் இந்த எச்சரிக்கையை அடுத்து இந்தியா பெரும் அதிருப்தி அடைந்துள்ளது. இதற்கு விளக்கமும் அளித்துள்ளது. (இ)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் தொடர்பான ஏற்பாடு நிகழ்வுகள் பற்றிய சித்திரவைகள் இணைக்கமன்றுகள் உற்பத்திக்குழுக்கள் கல்லூரி பணிமனைகள், பிரசாரக்குழுக்கள், மகளிர் சார்பான அமைப்பு மற்றும் பொது அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வொன்று வடமராட்சிப் பிரிவின் சேர்ந்தவர்களுக்கான வட்டவைப் பிரதேசரீதியாக இன்று வியாழக்கிழமை பின்வரும் அட்டவணைப்படி நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு பருத்தித்துறை வட்டவை பிரிவினருக்கு புலோலி திரையரங்கிலும் பி. ப. 2. மணிக்கு கரவெட்டி வட்டவைப் பிரிவினருக்கு நெல்லியடி ம. ம. வியிலும் பி. ப. 4 மணிக்கு வடமராட்சி கிழக்கு பிரிவினருக்கு நாகர்கோவில் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

### விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் (ப. நோ. கூ. சங்கம், தெங்கு பனம்பொ. உ. வி. கூ. சங்கம், மீன் பிடிச் சங்கங்கள்) தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை பகல் 10-00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் (மணிமம் கட்டிடம்) நடைபெறவுள்ளது.

### 5 பொலிஸார் பலி

(சண்டிகார்)

பஞ்சாப்பில் நஞ்சு கலந்த உணவை உட்கொண்ட 5 பொலிசார் துடிதுடித்து மரணமடைந்துள்ளனர்.

சீக்கிய போராளி ஒருவர் பொலிசாரின் உணவில் நஞ்சு கலந்து கொடுத்ததால் இக் கோரச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஏ)

### கையூம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இன்று திட்டமிட்டபடி நடைபெறவிருந்த சார்க் உச்சி மாநாட்டை நடத்தமுடியாததில் ஏமாற்றமடைந்திருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

பூட்டான் நாட்டுத் தலைவர் சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளமுடியாததினை ஏற்பட்டதை அடுத்து, மாலைதீவு அதிபர் ஏனைய தலைவர்களுடன் மாநாடு பற்றி ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையை அடுத்தே, இன்று மாநாட்டை நடத்தமுடியாதநிலை குறித்து அவர் இந்தியப் பிரதமருக்கு அறிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## க. பொ. த. (சாதாரண)

## விடைத்தாள் எடுத்துவர பணிப்பாளர் செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத்திணைக்களத்தில் தங்கி நிற்கும் [illegible] கப்பல் இரு கோணமலை மூலம் செல்லுதால், யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இம் மாதம் 8ம் திகதியே கொழும்பு செல்வார் எனத் தெரியவருகிறது.

1991ம் ஆண்டுக்கான க. பொ. த. (சாதாரண) பரீட்சையை யாழ். மாவட்டத்தில் நடத்துவதற்கு விடைத்தாள் தொகுதியை எடுப்பதற்கு இவர் கொழும்பு செல்கிறார்.

சில கல்வி அதிகாரிகள், இப்பரீட்சை சம்பந்தமான ஒழுங்கேடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, தரை மார்க்கமாகக் கொழும்பு சென்றுள்ளனர். (ச)

# லங்கா சீமெந்து

## ஊழியர்களுக்கு சம்பளம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவன தொழிலாளர்களுக்கு அவர்களது 8 மாத சம்பளத்தில் 25 வீதத்தை உடனடியாக வழங்குமாறு லங்கா சீமெந்து நிறுவன தலைமைப் பீடம் உத்தரவிட்டுள்ளது.

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படாமையால் லங்கா சீமெந்து நிறுவன ஐக்கிய தொழிற் பொதுத் தொழிலாளர் சங்கம் தலைமைப்பீடத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவந்தது.

இதன் பயனாக தொழிலாளர்களுக்கு 8 மாத சம்பளத்தில் 25 வீதத்தை உடனடியாக வழங்குமாறு தலைமைப் பீடம் உத்தரவிட்டுள்ளது. (86)

### மாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்கும் எதுவிதமான தொடர்புமில்லையென கூறியுள்ளார். (இ)

### புயல், வெள்ளம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலியாகியுள்ளதாக அரசுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹோமக் என்ற கிராமம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### திட்டமிட்டபடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

8ம், 9ம் திகதிகளில் கொழும்பில் கூடுவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தனர்.

மாநாட்டுக்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் இலங்கை அரசு பூர்த்திசெய்திருந்தது. வழக்கத்திற்கு ஏற்பவும் சார்க் அமைப்பின் விதிகள், ஒழுங்கு முறைகள் என்பவற்றுக்கு இசைவாகவும், அங்கத்துவ நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்களைக் கொண்ட நிலையக் குழுவும், வெளிநாட்டு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சர்கள் மன்றமும் கூடின.

நவம்பர் மாதம் முதலாம் திகதி பூட்டான் மன்னர், உள்நாட்டுப் பாதுகாப்புநிலையில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத சூழ்நிலை காரணமாக நவம்பர் 7ம் திகதி முதல் 9ம் திகதி வரை நடைபெறவுள்ள உச்சி மாநாட்டில் தம்மால் கலந்துகொள்ளமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகச் சகல அங்கத்துவ நாடுகளுக்கும் அறிவித்திருந்தார்.

இலங்கை ஜனாதிபதி, சார்க் அமைப்பின் தற்போதைய தலைவர் ஜனாதிபதி அப்துல் கையூமுடனும் ஏனைய நாட்டுத் தலைவர்களுடனும் கலந்து ஆலோசித்தார். இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் உச்சி மாநாட்டுக்கு வேறொரு திகதியை ஏற்பாடு செய்வது இலங்கைக்குச் சிரமமாக இருக்கும் என்று கூறி, பூட்டானின் அரசுத் தலைவர் உரிய முறையில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு, உச்சி மாநாட்டை நடத்தலாம் என்று ஆலோசனை தெரிவித்தார்.

உச்சி மாநாட்டின்போது சகல அரசியல் தலைவர்களும் பிரசன்னமாக இருக்கவேண்டுமென்ற கருத்தை இந்திய அரசாங்கம் தெரிவித்தது. எனவே சார்க் அமைப்பினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பான ஏகோபித்த கோட்பாடுகள் தொடர்பாக இணக்கம் காணமுடியவில்லை. எனவே 6-வது உச்சி மாநாடு நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மரண அறிவித்தல்

### Dr. சின்னப்பு வேலாயுதம்

(கண் வைத்திய நிபுணர்)

சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்தவரும் யாழ் போதனா வைத்தியசாலையிலும் கொழும்பு கண் வைத்தியசாலையிலும் கண் வைத்திய நிபுணராகக் கடமையாற்றியவருமான Dr. S. வேலாயுதம் அவர்கள் 31 - 10 - 91 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் பத்மாராணியின் அன்புக்கணவரும் சுகுமாரன், சுபாஷினி ஆகியோரின் அருமைத்தந்தையும் டினூஷாவின் அன்பு மாமனாரும் ஜீவனின் ஆசைப் பாட்டனாரும் காலஞ்சென்ற Dr S சுப்பையா, திருமதி தெய்வநாயகி சின்னராஜா, திருமதி இராசநாயகி பாலசுப்ரமணியம், ஆகியோரின் அருமைச்சகோதரரும் திரு S இரங்கநாதன், திருமதி கமலா லம்போதரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் No 8, வவசத் பிளேஸ், கொழும்பு 6 என்னும் இடத்தில் 2-11-91 சனிக்கிழமை நடைபெற்றது. இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திருமதி தேவகி குலத்துங்கபாரதி

சண்டிலிப்பாய் வடக்கு.

சண்டிலிப்பாய். (சி-5568)

### ஆறுமுகம் நல்லதம்பி

(நகை வியாபாரம், கன்னாதிட்டி)

ஆறுமுகம் நல்லதம்பி அவர்கள் காலமானார். அன்னார் காலம் சென்ற திருமதி இலட்சுமியத்தின் அன்புக் கணவரும் மைலாம்பிகை, மகேஸ்வரி, புவனேஸ்வரி, ஆறுமுகம், இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் பூபாலசிங்கம், ஜெகநாதன், அருமையா, கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கேதீசன், மாலதி ஜெகநாதன், சுசாந்தி, கிருபாகரன், சிவநேசன், ஜெகதீசன், நிரஞ்சன், ரேவதி, கனிவதனி, அஷ்வந்தி, ரசனன் ஆகியோரின் அன்புப் பேரனும், ரமேஸ்ராஜ்இன் பூட்டனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 183, நாவலர் வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக 07 - 11 - 91 (இன்று) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ந. ஆறுமுகம் (மகன்)

(இ 5572)

## நிவாரணம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேலணை, புங்குடுதீவு அகதிகளுக்கான உலர் உணவு விநியோகம், அங்கிருந்து அனுமதி கிடைக்காதபோதும் மேலும் ஒரு வாரத்துக்கு கொடுக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் உதவி அரசாங்க அதிபர்களை பணித்துள்ளார். (ச)

## விசேட சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் இன்று கந்தஷஷ்டி விழா ஆரம்பமாகிறது.

இத்திருவிழாவை யொட்டி இன்று முதல் 11-ம் திகதி வரை தினமும் மாலை 4-30 மணிக்கு காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. த. சிவகுமாரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

### தென்பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவித்தன

ஜனாதிபதிக்கு எதிராக இந்த அமைப்பு பெருமுனைப்புடன் செயற்பட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### சார்க் தலைவர்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'சார்க்' மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசும் கூறியபோதும் மேற்படி மாநாட்டில் கலந்துகொள்ள சார்க் தலைவர்கள் இன்று காலை வருவார்கள் என்றும் அரசச் செய்திகள் கூறின.

இன்று காலை பங்களாதேஷ் பிரதமர் திருமதி பேகம் காலிதா ஸியா, மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோர் கொழும்புக்கு. ராஜாங்க விஜயத்தை மேற்கொள்ளவிருக்கிறார்கள். (க-மா)

## கந்தஷஷ்டி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம ஆலய கந்தஷஷ்டி உற்சவம் இன்று 7-ம் திகதி ஆரம்பமாகிறது.

11-ம் திகதி திங்கள் சிவசூர தரிசனமும் 12-ம் திகதி செவ்வாய்க்கிழமை சூரன் போரும் 13-ம் திகதி புதன் காலை விசேட அபிஷேகம் மற்றும் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளது. (ச)

### வடபகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்திலுள்ள, பச்சிலைப்பள்ளி, பூநகரி உதவி அரசஅதிபர் பிரிவுகளில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணியுடன் நீக்கப்படுவதாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. (வி)

### இந்தியாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப்படைகள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டதற்கு ஜனாதிபதி பிரேமதாசாவின் காரசே முக்கிய காரணம் என்றும், பிரேமதாசா அரசுக்கு ஒரு பாடம் புகட்டும்விதமாகவே இந்தியா இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியிருக்கலாமென்றும் ஆயினும் இந்தியாவின் இந்நடவடிக்கை சார்க் நாடுகளின் எதிர்காலத்தைப் பாதிப்புறச் செய்யலாம் எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (ஏ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் விதானைத் தாரசல் யாழ்ப்பாணம் இலக்கிய மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/31.